# மகிளா நீதிமன்றம், பெரம்பலூர்

# அசல் வழக்கு எண்.19/2014

2019 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 13-ம் நாள் செவ்வாய் கிழமை பிரதிவாதி தரப்பு சாட்சியாகிய DW -1 வது நபரின் வாக்குமூலம், (1969-ம் ஆண்டின் 54வது விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திருமதி.கே.பழனியம்மாள், பெஞ்ச் கிளர்க் கிரேடு -1 என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிராமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சின்னராஜு | வயது | : |
| த/பெ.(அ)க/பெ. | : | தொழில் | : |
| ஊர் | : | சமயம் | : |
| வட்டம் | : | சாதி | : |
| மாவட்டம் | : | | : |

**முதல் விசாரணை**

நான் இந்த வழக்கில் முதல் பிரதிவாதி ஆவேன். இந்த வழக்கில் நான் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். அதை படித்து பார்த்துதான் நான் கையொப்பம் இட்டேன். 31.01.1935 தேதியிட்ட முத்து வெங்கடாஜல ரெட்டியார் சூடாமணி அம்மாளுக்கு எழுதி கொடுத்த கிரய பத்திரத்தின் பதிவு நகல் பி.வா.சா.ஆ.1 ஆகும். அதேபோல் 20.09.1937 ம் தேதி அன்று எனது தாயார் சூடாமணியம்மாளுக்கு முத்து வெங்கடாஜல ரெட்டியார் எழுதி கொடுத்த கிரய பத்திரத்தின் பதிவு நகல் பி.வா.சா.ஆ.2 ஆகும். 21.05.1939 தேதியிட்ட நாட்டுபெரிய முத்துமாச் என் அப்பா முத்து வெங்கடாஜல ரெட்டியாருக்கு எழுதி கொடுத்த கிரய பத்திரத்தின் பதிவு நகல் பி.வா.சா.ஆ.3 ஆகும். 21.10.1966 தேதியிட்ட பாகப்பத்திரத்தின் பதிவு நகல் பி.வா.சா.ஆ.4ஆகும். 06.08.1968 தேதியிட்ட நடராஜு எனது பெயருக்கு எழுதி கொடுத்த கிரய பத்திரத்தின் அசல் பி.வா.சா.ஆ.5 ஆகும். 07.12.1968 தேதியிட்ட பெரியக்காள் எனது பெயருக்கு எழுதி கொடுத்த கிரய பத்திரத்தின் அசல் பி.வா.சா.ஆ.6 ஆகும். 08.12.1969 தேதியிட்ட பொக்கினி எனது பெயருக்கு எழுதி கொடுத்த கிரய பத்திரத்தின் அசல் பி.வா.சா.ஆ.7ஆகும். 12.06.1984 தேதியிட்ட கண்ணம்மாள் என்பவர் எனது

பெயருக்கு எழுதி கொடுத்த கிரய பத்திரத்தின் அசல் பி.வா.சா.ஆ. 8ஆகும். 27.06.1990 தேதியிட்ட சகுந்தலா என்பவர் எனது பெயருக்கு எழுதி கொடுத்த தான பத்திரத்தின் அசல் பி.வா.சா.ஆ.9 ஆகும். 26.04.1991 ம் தேதியிட்ட கந்தப்ப கவுண்டர் மகன்கள் கணபதி, ராமசாமி, ஆகியோரிடம் நான் கிரயம் பெற்ற கிரய பத்திரத்தின் அசல் பி.வா.சா.ஆ.10ஆகும். 20.11.1966 தேதியிட்ட தான பத்திரத்தின் பதிவு நகல் பி.வா.சா.ஆ. 11 ஆகும். எனது பெயரில் ஏற்படுத்தப்பட்டுள்ள பட்டா அசல் பத்திரம் பி.வா.சா.ஆ. 12 ஆகும். ஈட்டு கடன் பத்திரத்தின் பதிவு நகல் பி.வா.சா.ஆ. 13 ஆகும். 21.05.2001 தேதியிட்ட ஜெயராமன் எனக்கு எழுதிக் கொடுத்த கிரய பத்திரத்தின் அசல் பி.வா.சா.ஆ. 14 ஆகும். 25 ஊக்காணியம்மன் தெரு, வீட்டிற்கான வரி ரசிது அசல் பி.வா.சா.ஆ.15 ஆகும். 26 ஊக்காணியம்மன் தெரு, வீட்டிற்கான வரி ரசிது அசல் பி.வா.சா.ஆ.16 ஆகும். மேற்படி வீட்டிற்கு நான் செலுத்தி வரும் தண்ணீர் வரி ரசிது பி.வா.சா.ஆ.17 வரிசை ஆகும் (எண்ணிக்கை 7). 6.05.2015 ம் தேதி அரும்பாவூர் காவல் நிலையத்தில் குற்ற எண் 140/15 இ.த.ச. பிரிவுகள் 294 (பி),323, 324, 506,(ii),ன் கீழ் நான் கொடுத்த புகாருக்காக பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையில் சான்றிடப்பட்ட நகல் பி.வா.சா.ஆ.18 ஆகும். 07.12.1968 ம் ஆண்டு பரிவர்த்தனை பத்திரம் அசல் பி.வா.சா.ஆ. 19 ஆகும். 07.07.2004 ம் தேதி ஜெயலெட்சுமி, மணிகண்டன் ஆகியோரிடம் நான் கிரயம் பெற்ற கிரய பத்திரம் அசல் பி.வா.சா.ஆ. 20 ஆகும்.